09.02.2016 C.C.61/08 PW1 சாந்தி

மு.வி.

நான் அரிட்டாபட்டியில் வசிக்கிறேன். கூலிவேலை செய்கிறேன். எதிரிகளை தெரியும். 2007ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 24ம் தேதி மாலை சுமார் 5 அல்லது 6 மணிக்கு எனது கணவரின் அண்ணன் அவரது மனைவி மற்றும் மக்கள் ஆகியோரிடையே எங்களுக்கிருந்த பாதை பிரச்சனை சம்மந்தமாக முன் விரோதத்தை மனதில் வைத்து எங்கள் வீட்டு நடைபாதையில் குப்பைகளை கொட்டியிருந்தார்கள். அதில் நடக்கும்போது கொட்டாச்சி குத்தி எனக்கு காயம் ஏற்பட்டது. ஏன் குப்பையை தள்ளிவிட்டாய் என்று எங்கள் இடத்தில் என்ன வேலை என்று சொல்லி உங்களை கொல்லாமல் விடமாட்டோம் என்று எதிரிகள் அனைவரும் சொல்லி எதிரி ரமேஷ் கம்பியால் எனது உச்சந்தலையில் அடித்து ரத்தக்காயமானது, வசந்தாவும் முருகனும் கம்பால் எனது இடது தோள்பட்டையில் கீழ்ப்பகுதியில் அடித்து காயமானது. ஓடிவந்த எனது கணவர் ஏன் எனது மனைவியை அடிக்கிறீர்கள் என்று கேட்டதற்கு எதிரி ராஜேஷ் அருவாளால் வெட்டி அதை தடுத்தபோது இடது கையிலும் இடது தோள்பட்டையிலும் வெட்டி இரத்தக்காயமானது. முருகனும் வசந்தாவும் எனது கணவரையும் அடித்தார்கள். எனது கணவர் ஓடிவாங்களே என்று சத்தம்போட்டதற்கு எதிர் வீட்டிலிருந்த சின்னக்குழந்தைகள் ஓடிப்போய் ஆட்களை கூப்பிட்டார்கள். அந்தப்பக்கம் போன ஆண்டியப்பன் ஆட்களை சத்தம்போட்டு ஆட்கள் ஓடிவந்து விலக்கிவிட்டார்கள். நல்லம்மாளும் குப்பாவும் அவர்கள் இருவருக்கும் கண் தெரியாது. அவர்களும் சத்தம்போட்டார்கள். எங்களை அடித்துப்போட்டுவிட்டு எதிரிகள் எங்களுக்கு முன்பாக காவல் நிலையம் வந்து புகார் கொடுத்துவிட்டார்கள். அருவாளை அருகில் அவர்கள் இடத்தில் போட்டுவிட்டார்கள். கட்டைகம்பு மட்டும் எனது வீட்டு வாசலில் கிடந்தது. நாங்கள் காவல் நிலையம் வந்து புகார் கொடுத்தோம். மேலூர் மருத்துவமனைக்கு மெமோ கொடுத்து அங்கு போய் சேர்ந்து பிறகு மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனைக்கு அனுப்பிவைக்கப்ட்டோம். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். புகார் மனு அ.சா.ஆ.1. இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தனர்.

கு.வி.

இல்லை.

20.06.2016 C.C.61/08

அ.சா.2 நல்லம்மாள் க-பெ. கக்கப்பன்

மு.வி.

நான் அரிட்டாபட்டியில் குடியிருக்கிறேன். கூலிவேலை செய்கிறேன். இவ்வழக்கு புகார்தாரர் சாந்தி, அவருடைய கணவர் வீரணன் ஆகியோரை எனக்கு தெரியும். எதிரிகள் ரமேஷ், ராஜேஷ், முருகன், வசந்தா ஆகியோரை எனக்கு தெரியும். இவ்வழக்கு சம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரித்தனர். போலீசார் விசாரணையில் தற்போது நீதிமன்றத்தில் கூறியதுபோன்றுதான் சொன்னேன்.

சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி கு.வி. செய்ய அரசுதரப்பில் அனுமதி கேட்கப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

இவ்வழக்கு சம்பவத்தின்போது நான் கடைபக்கம் சென்றுவிட்டேன். இவ்வழக்கு எதிரிகள் என்னுடைய உறவினர்கள் இல்லை. ஆனால் எதிரிகள் உள்ளூர்க்காரர்கள். கடந்த 25.4.07ம் தேதி மாலை 6 மணியளவில் எதிரி முருகன் குடும்பத்திற்கும், வாதியின் கணவர் வீரணன் (எ) ரவி குடும்பத்திற்கும் இடையே உள்ள முன்விரோதத்தின் காரணமாக எதிரிகள் அணைவரும் சேர்ந்து வீரணன் மனைவி சாந்தி பொதுப்பாதையில் நடந்துசென்றுகொண்டிருந்தபோது “ஏன்டி எங்கள் வீட்டு முன்பு நடக்கிறாய்” என்று கேட்டபோது சாந்தி “நான் பொதுப்பாதையில்தான் நடக்கிறேன்” என்றுசொல்ல எதிரி ரமேஷ் தன் வீட்டினுள் சென்று கம்பியை எடுத்து வந்து சாந்தியின் ததையில் அடித்து தலையில் ரத்தக்காயத்தை உண்டுபன்னி உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டினார் என்றும், இதனை பார்த்த வீரணன் தடுக்க வந்தபோது எதிரி ராஜேஷ் அரிவாளால் இடதுகை, இடது தோள்பட்டை ஆகிய பகுதிகளில் வெட்டி வீரணனுக்கு ரத்தக்காயங்களை ஏற்படுத்தினார் என்றும், எதிரி முருகன், வசந்தா ஆகியோர் கம்பால் சாந்தியையும் அவரது கணவரையும் மாறி மாறி அடித்தனர் என்றும், இச்சம்பவத்தை நேரில் பார்த்த நான் அவர்களை விலக்கிவிட்டேன் என்றும், பின்னர் சாந்தியும் அவரது கணவரும் மேலூர் காவல் நிலையத்தில் புகார் கொடுக்க சென்றனர் என்றும் போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகள் உள்ளூர்க்ககாரர்கள், பழக்கமுள்ளவர்கள் என்பதால் எதிரிகள் கேட்டுக்கொண்டதற்கிணங்க உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

20.06.2016 C.C.61/08

m.rh.3 புஷ்பா த-பெ. சோமகிரி

.

நான் அரிட்டாபட்டியில் குடியிருக்கிறேன். எனக்கு கடந்த 4 வருடத்திலிருந்து கண்கள் தெரியாததால் வேலைக்கு செல்வதில்லை. அதற்கு முன்பு கூலிவேலை செய்தேன். இவ்வழக்கு புகார்தாரர் சாந்தி, அவருடைய கணவர் வீரணன் ஆகியோரை எனக்கு தெரியும். எதிரிகள் ரமேஷ், ராஜேஷ், முருகன், வசந்தா ஆகியோரை எனக்கு தெரியும். இவ்வழக்கு சம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரித்தனர். போலீசார் விசாரணையில் சம்பவம் பற்றி தெரியாது என்றுதான் சொன்னேன்.

சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி கு.வி. செய்ய அரசுதரப்பில் அனுமதி கேட்கப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

இவ்வழக்கு சம்பவத்தின்போது நான் வயலுக்கு வேலைக்கு சென்றுவிட்டேன். இவ்வழக்கு எதிரிகள் என்னுடைய உறவினர்கள் இல்லை. ஆனால் எதிரிகள் உள்ளூர்க்காரர்கள். போலீசார் விசாரணையில் நான் கூறியுள்ள சங்கதில் அனைத்தும் உண்மை என்றும், தற்போது எதிரிகள் உள்ளூர்க்ககாரர்கள், பழக்கமுள்ளவர்கள் என்பதால் எதிரிகள் கேட்டுக்கொண்டதற்கிணங்க உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

20.06.2016 C.C.61/08

அ.சா.4 அய்யம்மாள் க-பெ. கோட்டக்காளை (எ) கரந்தமலை

.

நான் அரிட்டாபட்டியில் குடியிருக்கிறேன். நான் கூலிவேலை செய்கிறேன். இவ்வழக்கு புகார்தாரர் சாந்தி, அவருடைய கணவர் ரவி ஆகியோரை எனக்கு தெரியும். எதிரிகள் ரமேஷ், ராஜேஷ், முருகன், வசந்தா ஆகியோரை எனக்கு தெரியும். இவ்வழக்கு சம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி கு.வி. செய்ய அரசுதரப்பில் அனுமதி கேட்கப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

இவ்வழக்கு சம்பவத்தின்போது நான் வயலுக்கு வேலைக்கு சென்றுவிட்டு கடை வீதிக்கு டீ குடிக்க சென்றுவிட்டேன். . இவ்வழக்கு எதிரிகள் என்னுடைய உறவினர்கள் இல்லை. ஆனால் எதிரிகள் உள்ளுர்க்காரர்கள் என்பதால் தாய், பிள்ளையாக பழகுவோம். . போலீசார் விசாரணையில் வழக்கு சம்பவம் பற்றி நான் கூறியுள்ள சங்கதில் அனைத்தும் உண்மை என்றும், தற்போது எதிரிகள் உள்ளுர்க்ககாரர்கள், பழக்கமுள்ளவர்கள் என்பதால் எதிரிகள் கேட்டுக்கொண்டதற்கிணங்க உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

11.07.2016 C.C.61/08

அ.சா.5 ஆண்டியப்பன் த-பெ. கருப்பணன்.

மு.வி.

நான் அரிட்டாபட்டியில் வசிக்கிறேன். நான் கூலிவேலை செய்கிறேன். தற்போது என்னிடம் காட்டப்படும் கையொப்பம் என்னுடையதுதான். அது பார்வைமகஜரிலுள்ள முதல் கையொப்பமாகும். தேதி ஞாபகமில்லை. இன்றிலிருந்து சுமார் 9 வருடங்களுக்கு முன்பு மாலை சுமார் 6 அல்லது 6.30 மணிக்கு மேலூர் போலீசார் எங்கள் ஊருக்கு வந்தார்கள். அவ்வாறு வந்த போலீசார் எங்கள் ஊரைச்சேர்ந்த வீரணனுக்கும், அவருடைய அண்ணன் முருகனுக்கும் ஏதோ பிரச்சனை நடந்ததாகவும், அது சம்மந்தமாக விசாரிக்க வந்ததாகவும் சொன்னார்கள். அவ்வாறு வந்த போலீசார் ரவி என்ற வீரணன் வீட்டு முன்பு வந்து அந்த இடத்தை பார்வையிட்டு வரைபடம் வரைந்து எழுதிக்கொண்டார்கள். அதற்காகத்தான் மேற்கண்ட கையொப்பத்தை நான் செய்தேன். என்னுடன் அய்யணன் என்பவரும் கையெழுத்து செய்தார். பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆகும். போலீசார் என்னை விசாரித்தனர்.

கு.வி. எதிரிகளுக்கு சாட்சியை கு.வி. செய்ய வாய்ப்பளித்தும் கு.வி. செய்யவில்லை.

.

11.07.2016 C.C.61/08

அ.சா.6 அய்யணன் த-பெ. கருத்தபயல்.

மு.வி.

நான் அரிட்டாபட்டியில் வசிக்கிறேன். நான் கூலிவேலை செய்கிறேன். தற்போது என்னிடம் காட்டப்படும் கையொப்பம் என்னுடையதுதான். அது அ.சா.ஆ.2 பார்வைமகஜரிலுள்ள 2வது கையொப்பமாகும். தேதி ஞாபகமில்லை. இன்றிலிருந்து சுமார் 9 வருடங்களுக்கு முன்பு மாலை சுமார் 5 அல்லது 5.30 மணிக்கு நான் ஊரில் இருந்தபோது மேலூர் போலீசார் வந்தனர். அவ்வாறு வந்த போலீசார் ரவி என்ற வீரணன் வீட்டு முன்பு ரவிக்கும், அவருமடய அண்ணன் முருகனுக்கும் ஏதோ தகராறு நடந்ததாகவும் அது சம்மந்தமாக விசாரிக்க வந்திருப்பதாகவும் சொன்னார்கள். பின்பு போலீசார் அந்த இடத்தை பார்வையிட்டு மேற்கண்ட கையொப்பத்தினை வாங்கினார்கள். என்னுடன் ஆண்டியப்பன் என்பவரும் கையொப்பம் செய்தார். போலீசார் என்னை விசாரித்தனர்.

கு.வி. எதிரிகளுக்கு சாட்சியை கு.வி. செய்ய வாய்ப்பளித்தும் கு.வி. செய்யவில்லை.

29.08.2016 C.C. 61/08

அ.சா.7 வீரணன் என்ற ரவி த-பெ. ஆண்டியம்பலம்.

மு.வி.

நான் அரிட்டாபட்டியில் குடியிருக்கிறேன். நான் விவசாயவேலை செய்கிறேன். வாதி சாந்தி என் மனைவி. சாட்சிகள் நல்லம்மாள், குப்பா, அய்யம்மாள் ஆகியோரை தெரியும். எதிரி முருகன் என் அண்ணன், எதிரி வசந்தா என் அண்ணன் முருகனின் மனைவி. எதிரிகள் ரமேஷ், ராஜேஷ் ஆகியோர் என் அண்ணன் முருகனின் மகன்கள். என் வீடும், என் அண்ணன் முருகன் வீடும் பக்கத்து பக்கத்து வீடாகும். எனக்கும், என் அண்ணன் முருகனுக்கும் இடையே வயல் மற்றும் வீட்டிற்கு முன்பு உள்ள பாதை சம்மந்தமாக பிரச்சனை ஏற்பட்டு முன்விரோதம் இருந்து வருகிறது. கடந்த 25.04.07ம் தேதி மாலை சுமார் 6 மணிக்கு என் மனைவி வயலிலிருந்து வீட்டிற்கு வருவதற்காக என் அண்ணன் முருகன் வீட்டு முன்பு உள்ள பாதையில் நடந்து வந்துகொண்டிருந்தார். அப்போது நான் என் வீட்டிற்குள் இருந்தேன். அப்பொழுது அய்யோ அப்பா கொல்றாங்களே என்று என் மனைவியின் சத்தம் கேட்டது. உடனே நான் வீட்டிற்கு வெளியே ஓடிவந்து பார்த்தபோது ரமேஷ் கம்பியால் என் மனைவியின் மண்டையை உடைத்தார். உடனே நான் அய்யோ அப்பா என் சம்சாரத்தை அடிக்கிறீர்களே என்று கேட்டேன். அதற்கு ராஜேஷ் அவரின் வீட்டிற்குள் சென்று அருவாளை எடுத்து வந்து என் இடது கை கட்டை விரல் அருகேயும், இடது தோள்பட்டையிலும் வெட்டினார். முருகனும், வசந்தாவும் கம்பால் மாறி மாறி என்னையும், என் மனைவியையும் அடித்தார்கள். அப்போது அங்கு வந்த நல்லம்மாள், குப்பா, அய்யம்மாள் ஆகியோர் எங்களை விலக்கிவிட்டார்கள். என் மனைவி சாந்தி பாதையில் நடந்து வந்ததைப்பார்த்தது அந்தப்பாதையில் நடந்து வரக்கூடாது என்று எதிரிகள் 4 பேரும் சொல்லி அவரை அடித்தார்கள். .எதிரி ரமேஷ் என் மனைவியை பார்த்து உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டினார். பின்பு நானும், என் மனைவியும் மேலூர் காவல் நிலையம் சென்று என்மனைவி புகார் கொடுத்தார். போலீசார் என்னையும், என் மனைவியையும் மெமோ கொடுத்து மேலூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். பின்பு அங்கிருந்து மதுரை அரசு மருத்துவமனைக்கு எங்களை அனுப்பி வைத்தார்கள். போலீசார் இவ்வழக்கு சம்மந்தமாக என்னை விசாரித்தனர்.

கு.வி.: எதிரிகளுக்கு சாட்சியை கு.வி. செய்ய வாய்ப்பளித்தும் கு.வி. செய்யவில்லை.

09.08.2018 C.C. 61/08

அ.சா.1 சாந்தி க-பெ. வீரணன் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:

எனக்கும், எதிரி ரமேஷ் வீட்டிற்கும் பாதை சம்மந்தமாக பிரச்சனை உள்ளது என்றால் சரிதான். அது சம்மந்தமாக சிவில் வழக்கு எதுவுமில்லை. ஆனால் பேச்சுவார்த்தை கிடையாது. எதிரிகளும் எங்கள்மீது குற்ற வழக்கு போட்டு நிலுவையில் உள்ளது. அ.சா.ஆ.1 புகாரிலுள்ள கையெழுத்து என்னுடையதல்ல. நான் எப்போதும் வி.ஆர். என்று கையெழுத்து போடுவேன். நான் புகாரை எழுதி காவல்நிலையத்தில் கொடுத்துவிட்டு மருத்துவமனை சென்றேன். கொட்டாங்குச்சி குத்தி காலில் காயம் ஏற்பட்டதாக போலீசாரிடம் சொன்னேன். கம்பால்அடித்து உடல் முழுவதும் காயம் ஏற்பட்டதாக மருத்துவரிடம் சொன்னேன். எதிரிகள் யாரும் என்னை அடிக்கவில்லை என்றும், ரமேஷ்தரப்பினரை நான்தான் அடித்தேன் என்றால் சரியல்ல. வழக்கிலிருந்து தப்பிப்பதற்காக வழக்கறிஞரின் யோசனைப்படி ஒரு பொய்யான புகாரை தயார் செய்து அதன்பேரில் வழக்கை உற்பத்தி செய்து பொய்சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட காயத்திற்கும் எனக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

09.08.2018 C.C. 61/08

அ.சா.7 வீரணன் என்ற ரவி த-பெ. ஆண்டிஅம்பலம் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:

அ.சா.1 எனது மனைவி. எதிரிகள் எனது அண்ணன் குடும்பத்தினர்கள். எங்களுக்கும் எதிரிகளுக்கும் சுமார் 15 வருடங்களாக பாதை சம்மந்தமாக தகராறு ஏற்பட்டு பேச்சுவார்த்தை கிடையாது. நான் மருத்துவ சிகிச்சையிலிருந்து தானாக வெளியில் சென்றுவிட்டேன் என்றால் நானும் எனது மனைவியும் ஒன்றாக மருத்துவமனையிலிருந்ததால் எனது மனைவிக்காக காப்பி வாங்க கடைக்கு சென்றபோது தன்னிச்சையாக சென்றதாக அனுப்பிவிட்டார்கள். எங்கள் மீது எனது அண்ணன் குடும்பத்தார்கள் புகார் கொடுத்து வழக்கு நிலுவையிலுள்ளது என்றால் சரி. நான் அவர்களை தாக்கி அவர்களும் மருத்துவமனையிலிருந்ததால் நான் மருத்துவமனையிலிருந்ததால் போலீசார் என்னை பிடித்துவிடுவார்கள் என்று வெளியேறிவிட்டேன் என்றால் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட காயத்திற்கும் எதிரிகளுக்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. எனக்கு காயங்கள் ஏற்பட்டிருந்தால் முறையாக சிகிச்சை மேற்கொண்டிருப்பேன் என்றால் சரியல்ல. நான் வழக்கறிஞர் யோசனைப்படி வழக்கு உற்பத்தி செய்து பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.